சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 116/2019 Date: 03.09.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி–2(D.W.2) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திரு.செல்வசிகாமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கல்யாணி | சாதி | : |
| த/பெ | : ராமசாமி | சமயம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| தாலுகா | : | வயது | : 55 |

முதல் விசாரணை–

1) நான் தற்போது விருதுநகர் சார்பதிவாளர் அலுவலகம் எண்.2ல், இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கேட்கப்பட்ட விருதுநகர் டவுண் டி.எஸ்.எஸ்.எண்.36/ப–க்கான ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். 1973ம் வருடம் ஆவண எண். 17/1973ன் படி சுப்பையா, சொக்கையா ஆகியோர்கள் சஞ்சீவி நாயுடு என்பவருக்கு டி.எஸ்.எஸ்.எண்.36/ப அதில் உள்ள சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2) மேற்படி 03.01.1973ம் தேதிய கிரைய ஆவணம் உண்மை நகல் **சா.சா.ஆ.1** ஆகும். 12.10.1988ம் தேதி மேற்படி சொத்தை சஞ்சீவி நாயுடுவின் வாரிசுகளான ஜானகியம்மாள், ராதாகிருஷ்ணன், பாண்டி, சரோஜா ஆகியோர்கள் விருதுநகர் கூட்டுறவு Urban வங்கியில் ஆவண எண்.1377/1988ன் படி அடமானம் வைத்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி அடமான கடன் பத்திரம் **சா.சா.ஆ.2** ஆகும். மேற்படி

டி.எஸ்.எஸ்.எண்.36/ப– ன் ஒரு பகுதியான 556.7/8 சதுர அடி நிலத்தை சஞ்சீவி நாயுடுவின் வாரிசுகள் ஜானகியம்மாள், ராதாகிருஷ்ணன், பாண்டி ஆகியோர்கள் வசந்தி என்பவருக்கு ஆவண எண்.2412/1994ன் படி 14.11.1994ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 14.11.1994ம் தேதிய கிரைய ஆவணம் உண்மை நகல் **சா.சா.ஆ.3** ஆகும். மேற்படி சர்வே எண்ணிற்கு 01.01.1975–31.08.2025 வரையிலான வில்லங்க சான்று உண்மை நகல் **சா.சா.ஆ.4** ஆகும்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) சா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி சஞ்சீவி நாயுடு தான் சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். சஞ்சீவி நாயுடுவின் இறப்பிற்கு பின்னர் அவரது சொத்துக்கள் அவரது வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சஞ்சீவி நாயுடுவின் ஒரு வாரிசை தவிர்த்து மேற்படி சொத்தை பொறுத்து ஆவணம் ஏற்படுத்தினால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரிதான். சா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் ஜானகியம்மாள், ராதாகிருஷ்ணன், பாண்டி ஆகிய மூவர் மட்டுமே சஞ்சீவி நாயுடுவின் வாரிசுகள் என்று ஆவணத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4) சா.சா.ஆ 3 ஆவணத்தை பதிவு செய்வதற்கு சஞ்சீவி நாயுடுவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 அடமான பத்திரத்தில் சஞ்சீவி நாயுடுவிற்கு வாரிசுகள் ஜானகியம்மாள், ராதாகிருஷ்ணன், சரோஜா, பாண்டி ஆகியோர்கள் மட்டும் வாரிசுகள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். சஞ்சீவி நாயுடுவின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினராக சேர்த்து மேற்படி கிரைய ஆவணம் ஏற்படுத்தவில்லை என்பதால் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாமல் இருந்திருக்கலாம் என்றால் அப்போது நடந்த விபரம் பற்றி எனக்கு தெரியவில்லை. சாட்சியம் அளிக்க சார்பதிவாளருக்கு அழைப்பாணை வந்தது என்றும், எனக்கு தனிப்பட்ட முறையில் அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான், சார்பதிவாளர் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் வழங்கியுள்ளார்.

5) சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை யார் வேண்டுமானாலும் முறைப்படி மனு தாக்கல் செய்து நகல் பெற்று கொள்ளலாம் என்றால் சரிதான். சார்பதிவாளரை விசாரணை செய்வதற்கு 5ம் பிரதிவாதி தரப்பில் முன் அனுமதி பெறவில்லை என்பதால் எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களில் கடைசி பக்கத்தில் மட்டும் சார்பதிவாளர் உண்மை நகல் என கையொப்பம் செய்துள்ளார் என்றும், மற்ற பக்கங்களில் கையொப்பமோ அல்லது சுருக்கொப்பமோ சார்பதிவாளர் செய்யவில்லை என்றால் சரிதான். அனைத்து பக்கங்களிலும் சார்பதிவாளர் கையொப்பம் செய்யாததால் சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>**

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க சார்பதிவாளர் எனக்கு வழங்கிய அனுமதி கடிதம் **சா.சா.ஆ.5** ஆகும்.

<u>**மறு குறுக்கு விசாரணை–**</u>

சா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்ட கல்யாணி நான் தான் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அடையாள அட்டை வைத்துள்ளேன்.